[டாக்டர் க. பொன்முடி] [2010 மே 14

Unitary—ஒருமைப் பல்கலைக்கழகங்களை உருவாக்குகிறபொழுது, எந்த அடிப்படையிலே உருவாக்கப்பட வேண்டுமென்று கொள்கைகளையும் அவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வெகு விரைவில் இந்தக் குழுவினுடைய கூட்டத்தைக் கூட்டி, அறிக்கை பற்றியும் ஆலோசித்து, அடுத்த கூட்டத் தொடரிலேயே அதைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர்க் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) தமிழக சட்டப் பேரவை மற்றும் மேலவை நடவடிக்கைகள் உள்ளிட்ட ஆவணங்களை கணினி மூலம் பதிவு செய்து இணையதளத்தில் வெளியிடுதல் மற்றும் சட்டமன்ற ஒலி, ஒளிப் பதிவுகளை இலக்க முறை ஆவணங்களாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழக சட்டப் பேரவை வரலாற்றுச் சிறப்பும், பாரம்பரியமும் கொண்டதாகும். தமிழக சட்டப் பேரவையின் வரலாற்றை ஆவணப்படுத்துவது, எதிர்காலத்தில் இப்பேரவையின் வரலாற்றை நிலைநிறுத்தப் பெரிதும் அவசியமான, தேவையான ஒன்றாகும். மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், தீர்மானங்கள், மானியக் கோரிக்கைகள், நடைபெற்ற விவாதங்கள், ஆற்றப்பட்ட உரைகள், சமர்ப்பிக்கப்பட்ட பல்வகை அறிக்கைகள் போன்ற வரலாற்றுக் குறிப்புகள் தற்போது புத்தக வடிவில் உள்ளன. புதிய சட்டப் பேரவை செயல்படத் தொடங்கியுள்ள இந்தச் சூழ்நிலையில் பல ஆண்டு கால வரலாறு கொண்ட இந்தப் பேரவையின்

2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஆவணங்களை வருடவாரியாக வரிசைப்படுத்தி, வகைப்படுத்தி, அவற்றைக் கணினிகள்மூலம் அச்சேற்றி, பதிவு செய்து இணையதளமாக உருவாக்கி, அவை வலைதளத்தில் நிலையாக இடம்பெறத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், இதற்கான நிதியொதுக்கீடு செய்யப்படும். இதனால் இந்தப் பேரவை நிகழ்ச்சிகளில் நடைபெற்ற விவாதங்கள், ஆற்றப்பட்ட உரைகள் ஆகியவற்றை யாவரும் எளிதில் கணினிமூலம் காண இயலும். மேலும், எளிதில் படியெடுக்கவும் இயலும். இதேபோல், மேலவை ஆவணங்களும் கணினியில் பதிவு செய்யப்படும். இதன்மூலம், நாட்டிலேயே சட்டப் பேரவை, மேலவை ஆவணங்களை அறிவியல் ரீதியாக ஆவணப்படுத்திய முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழகம் பெறும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இவற்றோடு, ஒலி, ஒளிப் பதிவுச் சுருள்கள், குறுந்தகடுகள் ஆகியவையும் 'digitalise செய்தல்' என்ற முறையில் ஆவணமாக்கப்படும் என்பதைப் பெருமையுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இசைவுப்படி இம்மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஏ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐந்தாவது முறையாக தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, முதலமைச்சராக 18 ஆண்டுகள் அயராது மக்கள் பணியாற்றி, 19-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள, இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, அனைவருக்கும் வணக்கம்.

நாம் அமர்ந்துள்ள பிரமாண்டமான இப்புதிய சட்டப் பேரவைக் கட்டடம் உருவாவதற்கு முழு முதற்காரணமாக விளங்கும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு நாளும் *(மேசையைத் தட்டும் ஒலி)* தவறாமல் இங்கே வந்து, பல முறை கட்டடப் பணிகளைப் பார்வையிட்டதோடு, அரும்பெரும் ஆலோசனைகள் பலவற்றை வழங்கி, உலகத்திலேயே பசுமைச்